

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் மனைவி திருமதி சவுதா மற்றும் குடும்பத்தினர் சந்தித்து, அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் பிறந்த நாளான ஜூன் 15–ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் மகள் வஹிதா, மருமகன் அயாஸ் பாஷா ஆகியோர் சந்தித்து, கவிக்கோ அப்துல் ரகுமான் பிறந்த நாளான நவம்பர் 9–ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அனைத்து மத்ரஸாக்களின் கூட்டமைப்பின் தலைவர் மௌலவி எம்.அப்துல் ஹமீது பாகவி, செயலாளர் மௌலவி பி.எம். முஹம்மது அலி அன்வாரி, பொருளாளர் மௌலவி பி.ஷகீல் அஹமது ரஷாதி, நிர்வாகிகள் மௌலவி முனைவர் எம்.சதீதுத்தீன் பாக்கவி, மௌலவி ரூஹுல் ஹக் ஹஜ்ரத் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசின் வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம்.முஹம்மது அபூபக்கர், திண்டுக்கல் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஆர்.முகமது இலியாஸ் ஆகியோர் உள்ளனர்.



வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பில், துறைமுகம் தொகுதி பகுதி 57 டேவிட்சன் சாலையில் துணை மின் நிலையம் மற்றும் மின் மாற்றி அமைக்கும் பணிக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி. ஆகியோர் அடிக்கல் நாட்டினர். உடன் பகுதி செயலாளர்கள் முரளி, ராஜசேகர், மண்டலக் குழு தலைவர் ஸ்ரீராமுலு, கவுன்சிலர்கள் பரிமளம், ராஜேஷ் ஜெயின் உள்ளிட்டோர் உள்ளனர்.

